

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி குன்னாங்கல்பாளையம் ஓடை பகுதியில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் சார்பில் பனை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் பனை விதைகள் வெகுஜன நடவு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் முன்னிலையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் சு.ச.சசிகலா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜான்ஸ் வெஸ்டிரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்று வரும் திருச்சி புத்தகத் திருவிழா நிறைவு நாளான 06.10.2024 அன்று புத்தக கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு வீடுகளில் நூலகம் அமைத்து அதிக நூல்களை பராமரித்த நபர்களுக்கும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், புத்தகத் திருவிழாவிற்காக சிறப்பாக பணிபுரிந்த அலுவலர்களுக்கும், நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியவர்களுக்கும், நினைவுப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப்குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ராஜலட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தியாகராஜன், ஸ்டாலின்குமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் ராஜேந்திரன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அதியமான் கவியரசு, கவிஞர் நந்தலாலா, மாவட்ட நூலக அலுவலர் சிவக்குமார், மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு,

# ஆசிரியர்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்!

## பெரம்பலூரில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

பெரம்பலூர், அக். 8 -

பெரம்பலூரில் தமிழ் நாடு பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் 51 ஆம் ஆண்டு பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது. சங்கத்தின் மாநில தலைவர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.



அப்போது பேசிய அவர், சிறப்பாக பணியாற்றிய மற்றும் அதிக தேர்ச்சி விகிதத்தை கொடுத்த ஆசிரியர்கள், நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து சங்கத்தின்சார்பில்வைக்கப்பட்ட ஆசிரியர்களின் அனைத்து கோரிக்கைகளும் விரைவில் நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து கடந்த 2023-24 ஆம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளியளவில் முதல் மதிப்பெண் பெற்ற 85 அரசு பள்ளி மாணவர்களுக்கு, 100 விழுக்காடு தேர்ச்சியளித்த 370 பட்டதாரி ஆசிரியர்கள், மாநில நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பணி ஓய்வு பெறும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பரிசுகளும், பாராட்டு சான்றிதழும் வழங்கினார்.

இதனையடுத்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர்,

பெரம்பலூர் மாவட்டம் கடந்த சில ஆண்டுகளில் பொது தேர்வில் சிறப்பிடத்தை பெற்று வந்த நிலையில் இந்த ஆண்டு 8வது இடத்தை பெற்றுள்ளது. அதனை மீண்டும் முதலிடத்திற்கு கொண்டு வருவதற்கு அனைவரும் பாடுபட வேண்டும் என்று அறிவுறுத்தியதாக தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,

ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் அவர்களது கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும், ஆசிரியர்களின் பதவி உயர்வு குறித்த ஒரு கோரிக்கையும் தெரிவித்திருக்கிறார்கள். இதுபோன்ற ஆசிரியர்களின் அனைத்து கோரிக்கைகளும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அதனை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. வருகின்ற அக்டோபர் 15ஆம் தேதி நீதிமன்றத்தில் நல்ல ஒரு தீர்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறோம். அது கிடைக்கப்பெற்ற உடன் ஆசிரியர்களின் பெரும்பாலான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விடும் என்றார். பட்டதாரி ஆசிரியர்களின் காலி பணியிடங்களை நிரப்புவது குறித்தும் நீதிமன்றத்தின் கருத்துக்காக காத்திருப்பதாக தெரிவித்த அமைச்சர், பள்ளிகளின் அருகே போதைப் பொருட்கள் விற்பதை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார். ஆசிரியர்களின் பணிச்சுமை குறைக்கும் பொருட்டு EMIS சிஸ்டத்தை செயல்படுத்துவதற்கு தனியாக பணியாளர்களை நியமித்து வருகிறோம். அது முடிவுற்ற பிறகு அவர்களின் பணிச்சுமை குறையும் என்றார். இந்த விழாவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் மற்றும் பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், பரிசு பெற தேர்வான ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### பூரண மதுவிலக்கு என்பதுதான் எங்களது இலட்சியம்!

# படிப்படியாக டாஸ்மாக் கடைகளைக் குறைத்து வருகிறோம்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை அக்.8 -

புதுக்கோட்டையில் அகரப்பட்டி மற்றும் பெருமாள்பட்டி ஆகிய இடங்களில் அங்கன்வாடி மைய கட்டிடங்களை சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்.

இதன் பின்னர் செய்தியாளரிடம் பேசிய சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி,



அகில இந்திய அளவில் மதுவிலக்கு கொண்டு வந்தால் தான் சாத்தியமே என்று தான் கூறினோமே தவிர, பூரண மதுவிலக்கு வேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் லட்சியம் மதுவிலக்கு ஒன்றிய அரசுதான் அமல்படுத்த வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோமே தவிர நாங்கள் மதுவிலக்கு அமல்படுத்த மாட்டோம் என்று கூறவில்லை. 2016 ஆம் ஆண்டு பூரண மதுவிலக்கு என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியது உண்மையா பொய்யா என்று தெரியவில்லை. அன்றைய தேர்தலில் இந்த கருத்து கூறியதாலேயே இருபதில் இருந்து 30 தொகுதிகள் தி.மு.க. இழக்கக் கூடிய சூழ்நிலை உருவாக்கியது என்ற கருத்து நிலவுகிறது.

திருப்பூர், ஈரோடு, கோவை இடங்களில் உள்ள தொழிலாளர்கள் அப்போது தி.மு.க.வுக்கு எதிராக மதுவிலக்கு அமல் படுத்துவோம் என்று கூறியதால் வாக்களித்தனர்.

இந்த தேர்தலில் படிப்படியாக மதுக்கடையை குறைப்போம் என்று கூறினோம். அதன்படி 500 கடைகளை மூடியுள்ளோம். பூரண மதுவிலக்கு உடனடியாக கொண்டு வருவோம் என்று நாங்கள் கூறவில்லை.

பூரண மதுவிலக்கு என்பது எங்களது லட்சியம் படிப்படியாக குறைத்து வருகிறோம்.

தனியார்கள் எஃப் எல்டு பார் என்று அனுமதி பெற்று நடத்தி வருகின்றனர். அது ஒரு லக்சூரி பாராகும். டாஸ்மாக் பாருக்கும் அதுக்கும் வித்தியாசம் உள்ளது. அரசியல் கட்சி தொடங்கும் அனைவருமே கூறும் கருத்துகளை தான் நடிகர் விஜய்யும் கூறுகிறார்.

நாங்கள் எங்கள் பாதையில் மிகத் தெளிவாக உள்ளோம், பயணத்தில் தெளிவாக உள்ளோம்.

இலக்கில் தெளிவாக உள்ளோம்.

2026 எங்களுடைய இலக்கு 200 சீட். 234 இலட்சியம் 200 நிச்சயம்.

எங்களிடம் நேரடியாக யாரும் ஆட்சியில் பங்கு கேட்கவில்லை

முதல் இடம் அனைத்து கூட்டணி கட்சிகளும் தலைவர்களும் அன்போடும் பாசத்தோடும் உள்ளனர்.

அன்புமணி ராமதாஸ் மதுக்கடைகளை குறையுங்கள் அல்லது ராஜினாமா செய்யுங்கள் என்று கூறிய கருத்திற்கு பதில் அளித்த அவர் அன்புமணி ஆட்சியில் இருந்தால் அவருக்கு தெரியும் ராஜினாமா செய்வது குறித்து.

பூரண மதுவிலக்கு என்பது இந்தியா முழுவதுமாக கொண்டு வந்தால் மட்டுமே சாத்தியம்

இருப்பினும் தமிழக முதல்வர் தமிழகத்தில் மதுவிலக்கு கொண்டு வரக்கூடிய நடவடிக்கையை நிச்சயம் எடுப்பார், மது கொள்கையை பொருத்த மட்டும் என்றைக்குமே நாங்கள் ஒரே கருத்து தான்.

ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று நாங்களும் தான் கேட்கிறோம். தேர்தல் அறிக்கையிலே நாங்கள் கூறியுள்ளோம்.

தமிழக அரசால் ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்த முடியாது ஒன்றிய அரசு தான் நடத்த முடியும்

சென்சஸ் என்பது ஒன்றிய அரசு பட்டியலில் உள்ளது என்று அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டி அளித்தார்.

### மூலனூர் ஒன்றியம், கன்னிவாடி - மூலனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில்

# ரூ.9.80 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

திருப்பூர், அக். 8 -

திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஒன்றியம், கன்னிவாடி மற்றும் மூலனூர் பேரூராட்சிக் குட்பட்ட பகுதிகளில் ரூ.9.80 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 03.10.2024 வியாழக்கிழமை அன்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில்

திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஒன்றியம், கருப்பன்வலசு ஊராட்சி, பட்டத்திபாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க கட்டடத்தினை திறந்து வைத்தும், கன்னிவாடி பேரூராட்சி, மணலூரில் ரூ.2.76 கோடி மதிப்பீட்டில் ஒரத்துப்பாளையம் தொடக்கப்பள்ளி முதல் மணலூர் சாலை வரையிலும், கன்னிவாடி முதன்மை சாலை எரச்சப்பாடி முதல் மொங்கநல்லாம்பாளையம் சாலை பிரிவு வரையிலும், நொச்சிவலசு குடிநீர் தொட்டி முதல் கரை வரையிலும், கொளத்துப்புதூர் ஆதிதிராவிடர் காலனி முதல் ஒரத்துப்பாளையம் பேருந்து நிறுத்தம் வரை மற்றும் மொங்கநல்லாம்பாளையம் முதல் ஸ்பிக்டெக்ஸ் மில் வரையிலும் தார் சாலை சீரமைக்கும் பணி, மூலதன மான்ய திட்டத்தின் கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் கன்னிவாடி ஆதிதிராவிடர் காலனி மற்றும் கிறிஸ்டியன் தெரு ஆகிய பகுதிகளில் புதிய ஆழ்துளைக்கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை துவக்கி வைத்தும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் கன்னிவாடி பேரூராட்சிக்குட்பட்ட காதக்கோட்டை பகுதியில் பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தும், மூலனூர் ஒன்றியம், புஞ்சைதலையூர் ஊராட்சி காத்தசாமிபாளையத்தில் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைக்கும் பணி, வேளாண்பூண்டி ஊராட்சி, ஆயிக்கவுண்டன் பாளையத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடை கட்டடத்தினை திறந்து வைத்தும், ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியை திறந்து வைத்தும், வேளாம்பூண்டி ஊராட்சி மாலமேட்டில் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் பெருமாள் பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியினை திறந்து வைத்தும், மாலமேட்டில் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியினை திறந்து வைத்தும்,

மூலனூர் பேரூராட்சி, லட்சுமி நகர், வார்டு எண்.6 என். எஸ்.என். மண்டபம் அருகில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ லட்சுமி நகர் பூங்காவை திறந்து வைத்தும், போளரையில் கலைஞர் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.37 கோடி மதிப்பீட்டில் கணேசன்புதூர் புதுநகர் குறுக்கு வீதிகள் கரூர் தாராபுரம் சாலை முதல் போளரை வரை, கரூர் தாராபுரம் சாலை முதல் வஞ்சிபாளையம் சாலை வரை மற்றும் பள்ளிபட்டி முதல் சின்னக்காம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி வரை தார் சாலை பலப்படுத்தும் பணிகளை துவக்கி வைத்தும், ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் சின்ன க்காம்பட்டி முதல் திருமண மண்டபம் வரை சின்னக்காம்பாட்டி குறுக்கு வீதிகள், சின்னக்கா ம் பட்டி பகவான்கோவில் சாலை முதல் எலந்தமடைப்புதூர் சாலை வரை, வஞ்சிபாளையம் புதுகாலனி குறுக்கு வீதிகள், பள்ளிபட்டி ஆதிதிராவிடர் வீதி குறுக்கு வீதிகள் மற்றும் கரூர் தாராபுரம் சாலை முதல் வஞ்சி பாளையம் சாலை வரை தார் சாலை பலப்படுத்தும் பணிகளை துவக்கி வைத்தும், 15வது மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்கத் தொட்டியை திறந்து வைத்தும், வார்டு 13 யில் ரூ.94.00 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிபட்டி ஆதிதிராவிடர் காலனி முதல் எலந்தமடைப்புதூர் சாலை வரை தார் சாலை பலப்படுத்தும் பணியினை துவக்கி வைத்தும், அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் வார்டு எண்13யில் பள்ளிபட்டி ஆதிதிராவிடர் காலனியில் தார்சாலை பலப்படுத்தும் பணி, ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.11யில் மேட்டுவலசு ஆதிதிராவிடர் காலணியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.9.80 கோடி மதிப்பீட்டில் 19 புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தனர்

இந்நிகழ்ச்சியில் ஆவின் துணை மேலாளர் கணேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் மூலனூர் ஒன்றியக்குழு துணைத் தலைவர் ப.பழனிச்சாமி, துரை.தமிழரசு, பேரூர் கழக செயலாளர்கள் மூலனூர் பேரூராட்சி தலைவர் மக்கள் தெண்டபாணி, கன்னிவாடி சுரேஷ், மூலனூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் சுமதி கார்த்திக், மூலனூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதர், வெங்கடேஷ், உதவி பொறியாளர்கள் அருண்குமார், கார்த்திக் குமார், கன்னிவாடி பேரூராட்சி தலைவர் ரேவதி சுரேஷ், செயல் அலுவலர் ஆனந்த் குமார் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன் சார்பில் புதுப்பிக்கப்பட்ட போக்குவரத்து விழிப்புணர்வு பூங்காவினை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் திறந்து வைத்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கு.ஜவகர், மாநகராட்சி ஆணையாளர் என்.மனிஷ், தலைமை பொறியாளர் விஜயகுமார், மாநகர கழக செயலாளர் மு. சுப்பிரமணியம், மண்டலத் தலைவர் சக்திவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்வில் ஒளிரும் பவுண்டேஷன் தலைவர் எம்.சின்னசாமி, செயலர் எஸ்.கணேசன், உள்கட்டமைப்பு குழு தலைவர் எ.யோகேஷ்குமார், உதவி தலைவர் எம்.குப்புசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.5.57 கோடி மதிப்பீட்டில்

# செஞ்சி ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலகக் கட்டிடம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 8 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தான் முன்னிலை வகித்தார்.வட்டார வளர்ச்சி அலுவலர் சீத்தாலட்சுமி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்திட்டத்தின் கீழ் 5 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு பணியை தொடங்கி வைத்தார். இதில் ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,உதவி செயற்பொறியாளர் முகமது யாசின்,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பழனி, சசிகலா, குமார், அபிராமி , ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர் முல்லை அனைவருக்கும் நன்றி கூறினார்.



சேலம் மாவட்டம் அயோத்தியாபட்டணம் ஒன்றியம் மின்னாம்பள்ளி ஊராட்சியில் ரூ. 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கிக்கு புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இதனை அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஹேமலதா விஜயகுமார் வங்கி பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ. விஜயகுமார், வடக்கு ஒன்றிய செயலாளர் ரத்தினவேல், மாவட்ட பிரதிநிதி அகரம் ராஜேந்திரன், ஒன்றிய பொருளாளர் பழனிவேல், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோபால், ஒன்றிய குழு உறுப்பினர் ஆறுமுகம், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் மணி, தகவல் தொழில் நுட்ப அணி உதயகுமார், மாவட்ட விளையாட்டுதுணை அமைப்பாளர் லட்சுமண பெருமாள், நாட்டாமை ராஜேந்திரன், செல்லியம்பாளையம் சுரேந்திரன், அழகரசன், சுரேஷ், நாகேந்திரன் கூட்டுறவு வங்கி துணை மேலாளர் அழகு, கிளை கழகச் செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.